109

முரசொலி

வார இதழ்

2 அணா

ஆசிரியர்.. மு. கருணாநிதி

முரசு 1 | சென்னை | 2 — 7 — 54 | வெள்ளி | ஒலி 14

மஞ்சள் நதி ஓரம் கங்கை நதி தீரம்?

பரமசிவனுக்கும் பார்வதி தேவியாருக்கும் வடக்கே திருமண வைபவமாம்—பரத கண்டமே பரமனை சேவிக்க அங்கே போய்க் கொண்டிருந்ததாம்—அதனால் பூமாதேவியே குடை சாய்ந்தாளாம் — தெற்கு உயர்ந்துகொண்டே போனதாம்-மேரு தாழ்ந்தபடியே இருந்ததாம்—உடனே முக்கண்ணன், கடலைக் குடித்த குட்முனிவராம் அகத்தியனை தெற்கே அனுப்பினாராம்—அகத்தியன் தெற்கில் அமர, சமநிலை ஏற்பட்டதாம்—பௌராணிகன் இந்த சுவையான சம்பவத்தை—விஞ்ஞானம் கஷ்டப்பட்டு கண்டுபிடித்த குருத்துவ கேந்திர தத்துவம் அப்போதே எம்பெருமானால் நிலைநாட்டப் பெற்ற விந்தையை—பாட்டிசைத்து சொல்லுவான், பக்தர்கள் பரவசம் அடையும் வண்ணம்! இந்த புராணக் கதையை நினைவுறுத்தும்படி சென்ற வார உலக நிகழ்ச்சிகள் அமைந்திருக்கின்றன.

அமெரிக்காவிலே ஐசன்ஹோவரும் சர்ச்சிலும் சந்தித்தனர். அதே நேரத்தில் உலகத்தவர் கவனத்தையெல்லாம் ஒருங்கே ஈர்த்தது நேரு—சூ என்லாய் சந்திப்பு. சீனத்துப் பிரதமரைப்பார்க்க பாலம் விமான நிலையத்தில் டில்லி மாநகரமே திரண்டிருந்ததாம்.

இந்த நூற்றாண்டின் அதிசய சந்திப்பு-ஆசியாவின் அமைதிக்கு துந்தகம் விளைவிப்பவர்களுக்கு சரியான கண்டிப்பு—என்றெல்லாம் பத்திரிகைகள் தலைப்பு கொடுத்தன. நாற்பது கோடி மக்களின் பிரதம மந்திரியும் ஐம்பது கோடி மக்களின் பிரதமரும் முதன் முறையாகச் சந்தித்திருக்கின்றனர். ஆசியாவின் தலைவிதியைப் பற்றி பலப்பல பேசியிருப்பார்கள்; ஆசியாவின் பெரும் பகுதிக்கு தலைவர்களல்லவா, அவர்கள்! இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏகாதிபத்திய இரும்புப் பிடியிலிருந்து விடுதலை பெற்று அவர்களுடைய தாசானு தாசர்களுக்கு பாஷாணம் தந்து-இலட்சியக் கொடி பறக்கவிட்ட இரு பெரும் இயக்கத்துக்கு தலைவர்கள் சந்தித்திருக்கின்றனர். சூ தன் வாழ்க்கையில் ஆறில் ஒரு பகுதியை "யாரே எனக்கு நிகர்? — ட்ரூமனின் துணையினால் மலையே போர் புரியவரினும் நிலைகுலையேன்; விலை பேசுவேன் எந்தன்தேயமாம் சீனத்தை" என்று வாய்ப்பறை அடித்து,செறுக்கித்திரிந்த சியாங்கே ஷேக்கின் கொடுங்கோலுக்குப் பயந்து — தடித்த புருவங்களை சிரைத்துக்கொண்டு — மாறுவேடத்தில் மக்களிடையே கொள்கையைப் பரப்பிய கோமகன் — பிறப்பால் பணக்காரராக இருந்த போதும் பாரிசின் நிலக்கரிச் சுரங்கத்திலே செவ்வரி படர்ந்த தன் மேனி கருகிய போதும் அயராது உழைத்த ஏந்தல், அவர் தான் நேருவைச் சந்தித்திருக்கிறார்.



நேருவும் சூவைப்போலத் தான் — கடலைப் போன்ற மாளிகையில் பிறந்தவர் — அரசியல் வாழ்வின் பெரும் பகுதியை காராக்கிரகத்தில் கழித்தவர் — இந்திய உபகண்டத்துக்கு விடுதலை வெறியை ஊட்டியவர் — அந்தவீரர்கள் சந்தித்திருக்கின்றனர். முக்கியமான சந்திப்புதான்! ஆசியாவில் சுதந்தரத் தீயை மூட்டிய தீப்பந்தங்கள் உராய்ந்து கொண்டிருக்கின்றன. அகலவாய் திறந்து—நெடுநாளைய அடிமைத் தளையை அறுத்து—ஆதிபத்தியவாதிகளை விழுங்கிவிட்ட எரிமலைகள் தழுவிக் கொண்டிருக்கின்றன. ஆம்! வாளொடு வாள்—இரத்தக் கரையைத் துடைத்துக் கொண்டு முத்தமிடும் காட்சி இது. உண்மையிலேயே ஏகாதிபத்திய காண்டாமிருகங்களுக்கு மருட்சி அளிக்கும் செய்தி-இது! அதனால் தான் நாமும் மகிழ்கிறோம். இனிமேல் உலகிலே போர் வெறி மறையும்—சமாதானப்புருகொஞ்சி விளையாடும் என்கிற நினைப்பு தோன்றும் போதெல்லாம் நமது உள்ளங்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் தோய்கின்றன. அதே நேரத்தில் நம்மால் ஒரு சோகச் சேதியை மறைக்காமலிருக்க முடியவில்லை. அழகு உவமைகளை அள்ளிக் கொட்டி அவர்களுடைய சந்திப்பை வர்ணிக்கிறோம்—அந்த உவமைகள் பொருந்தாத நிலை கண்டு நாம் வருந்தத்தான் வேண்டியிருக்கிறது.

சூ என்லாயைப் போல நேருவும் ஒரு எரிமலைதான். ஆனால் இந்த எரி நெருப்பு ஆதிபத்தியத்தை விரட்டியதே தவிர — இந்த உபகண்டத்துக் குடும்பங்களிலே குடியேறிவிட்ட வறுமையென்னும் கொள்ளை நோயை பொசுக்க வில்லை. நேருப் பண்டிதர்சூவைப்போல வெள்ளையரின் கருவறுத்த கூர்வாள்தான். ஆனால் அந்த வாள் 'காமன் வெல்த்' என்னும் கட்டுப்பாட்டின்முன்னே கரம் நழுவிக் கீழே சாய்கிறது. யார்தான் பொருந்தாத இந்த உவமையைச் சகிக்க முடியும்?

நேரு செங்கோட்டையில் அடியெடுத்து வைத்த சில ஆண்டுகளுக்குப் பின்னர்தான் சூ—என்—லாய் சீனத்துப் பிரதமரானார். இந்த பாரத்வருஷத்தில் — வெள்ளையனை விரட்டி அடித்த இந்த பெருவையத்தில் — ஐந்தாண்டுத் திட்டங்களை அடுக்கிவிட்டார். அமெரிக்க பிரபுக்களை அழைத்துவந்து அவர்களிடமிருந்தெல்லாம் நற்சாட்சிப் பத்திரங்களை பெற்று நமக்கெல்லாம் காட்டினார். இருந்தும் நாம் என்ன காணுகிறோம்—சாக்கடையிலே நெளியும் புழுக்கள்—அதற்குப் பக்கத்திலே பசியால் துடித்து — பனியால் நனைந்து நெக்குருகும் பாரதத் தாயின் புத்திரர்கள் — இவைகளையெல்லாம் கவனிக்க நேரமில்லாது விருந்து மண்டபத்திலே, நடன கலாநிலயத்திலே தலைமையுரை ஆற்றும் நாட்டின் சாரதிகள் — அப்பப்பா! சகிக்க முடியாத கொடுமை!

குறை கூறுபவர் நாம் மட்டுமல்ல, ஐந்தாண்டுத் திட்டத்தின் பவிஷைப்பற்றி ஆச்சாரியா கிருபளானியே கோவையில் பேசியிருக்கிறார் — "5—வருடத் திட்டத்தால் மனிதனுக்கு என்ன பலன் கிடைத்தது? உற்பத்தி செய்யுங்கள் அல்லது மடியுங்கள் என்ற கோஷம் கிளப்பப் படுகிறது. நாம் உற்பத்தியை அதிகரித்து மடிந்து கொண்டிருக்கிறோம். நம் வாங்கும் சக்தியும் — சம்பளமும் குறைந்தபடி இருக்கிறது. இந்த திட்டத்தால் நமக்கு என்ன பெருமை —" இப்படியெல்லாம் பேசித்தீர்த்து விட்டார் பிரஜாசோஷலிஸ்ட் தலைவர். சூ என்லாய், டில்லியோடு திரும்பிவிட்டார் — மலர்க் காட்டைத்தான் பார்த்திருப்பார் — பக்கத்திலிருக்கும் கள்ளிக்காடு அவரது பார்வை படாதவாறு மறைக்கப்பட்டிருக்கும். இன்ப சுதந்திரம் பெற்ற ஆண்டுகள்

[5-ம் பக்கம் பார்க்க]



[எம். கே.]

சில திங்களாக தஞ்சை மாவட்டத்திலே என்றுமில்லாத வாறு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சாரம் புயல் வேகத்திலே நடைபெற்று வருகிறது. கழகத்தின் முன்னணி வீரர்கள் அனைவருமே தஞ்சைத் தரணியில் சுற்றுப்பயணம் அமைத்துக் கொண்டு சூறாவளி வேகத்தில் சுற்றிவருகின்றனர். இது எப்போதும் — எல்லா மாவட்டங்களிலும் நடைபெறுவது போன்ற ஒரு நிகழ்ச்சி எனினும் — இதுபற்றி மாற்றுக் கட்சி வட்டாரங்களிலே பேசப்படும் திகில் நிறைந்த வார்த்தைகள் நமது காதுகளில் விழாமலில்லை. தஞ்சை சுற்றுப் பயணக் காட்சிகளில் சூழ்ந்து நின்று மக்கள் வெளியிடும் ஆர்வத்தைக் காணும் யாருமே நம்மைப் பற்றி கிலி கொள்ளத்தான் நேரிடும். எல்லா கூட்டங்களும் எப்படி நடந்திருக்கும் — ஏறத்தாழ இரண்டுமாத காலத்திற்குள் நாலைந்து முக்கிய பேச்சாளர்கள் பற்பல கூட்டங்களிலே கலந்து கொண்டு தஞ்சையை சுற்றியிருக்கின்றனரே — அந்தப் பயணத்தின் சிறப்பும் பயனும் எப்படியிருந்திருக்கும் என்பதை நானும் எனது நண்பர்களும் நடத்திய சுற்றுப் பயணத் திட்டத்திலிருந்தே ஒருவாறு உணர முடிகிறது.

தஞ்சை மாவட்டத்து செயல் வீரர் — கெழுதகை நண்பர் — அதிரைதந்த மாணிக்கம் — தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் தஞ்சை மாவட்டப் பகுதிகளிலே எட்டு நாட்கள் சுற்றுப் பயணத்திட்டம் வகுத்தார். நானும், புதுமை நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் அவர்களும் அந்தச் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டுமென்றும் பணித்தார் — முதலில் ஜூன் முதல் நாள் வலங்கைமான் என்னும் ஊரில் சுற்றுப் பயணநிகழ்ச்சி துவங்கியது. ஆரம்பமே ஆகஸ்டுவீரர்களின் எதிர்ப்போடு அமைந்தது. கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்த இடத்தை தேசியத் திருவாளர்கள் படாத பாடு பட்டு மாற்றும்படி செய்து விட்டார்கள் — அவர்கள் செய்ததும் நல்லதாய்த்தான் முடிந்தது. முதலில் ஏற்பாடு செய்திருந்த இடம் குறுகலான இடம். மக்களோ வெள்ளம். பிறகு ஏற்பாடு செய்த, இடமில்லா விட்டால் கூட்டத்தை சமாளித்திருக்க முடியாது — ஆகவே அந்த காங்கிரஸ் "கண்யவான்"களுக்கு நன்றி தெரிவித்து விட்டு கூட்டத்தை நடத்தினோம். நான், இளங்கோ, எஸ். எஸ். ராஜேந்திரன், வலங்கைமான் அரங்கண்ணல் ஆகியோர் தோழர் கோவிந்தசாமியின் தலைமையில் பேசினோம் — இரவு 8-30 மணிக்கு கூட்டத்தை முடித்து விட்டு அங்கிருந்து அதங்குடி என்ற சிற்றூர் கூட்டத்துக்கு புறப்பட்டோம். அங்கு 9மணிக்கு ஆரம்பிக்கப் பட்டது கூட்டம். தோழர் சீதாராமன் தலைமையில் நான், இளங்கோ, ராஜேந்திரன், எஸ். எம் வைத்திலிங்கம் ஆகியோர் பேசினோம். இரவு 11மணிக்கு கூட்டம் முடிந்தது. விவசாயப் பெருங்குடி மக்கள் பல்லாயிரக் கணக்கிலே கூடியிருந்து கேட்டனர். ஜூன் 2ம் நாள் மாலை 6மணிக்கு வடக்கு மதுக்கூரில் ஒரு கொடியேற்று விழா நிகழ்ச்சியிலும், தோழர் கோவிந்தராசன் குழந்தைக்குப் பெயரிடும் விழாவிலும் கலந்து கொண்டு, மதுக்கூர் பொதுக் கூட்டத்தை நடத்திட வந்து சேர்ந்தோம். அந்த ஊரிலே தான் எத்துணை பெரிய கூட்டம். ஆயிரக்கணக்கிலே கூடிநின்றோர் திராவிட நாட்டுப்பிரிவினை முரசொலித்தனர். அவர்களிடையே நாங்கள் பேசினோம்; தோழர் முகமதுயாகூப் என்ற இளந் தோழரும் முழங்கினார். நண்பர் வாஞ்சிலிங்கம் தலைமை வகித்தார். அடுத்த கூட்டத்திற்குப் போக வேண்டிய அவசியத்தால் கூட்டத்தை 8-30க்கு முடித்து விட்டு துவரங்குறிச்சி முக்கூட்டு சாலை கூட்டத்திற்குப் புறப்பட்டோம். அங்கே இரவு மணி 9-30க்கு சென்றோம்- ஆறுமணி முதலே கூடிநின்று வரவேற்றனர் பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர். அவர்களுக்கும் பசி — எங்களுக்கும் பசி — பசியை அடக்க 'சோடா' குடித்துக் கொண்டு மூவரும் பேசினோம். அரங்கநாதன், இராவணன் என்ற தோழர்களும் கருத்துரை வழங்கினர் தோழர் வீரப்பன் தலைமை தாங்கினார். கூட்டம் முடியும்போது மணி என்ன தெரியுமா? இரவு பனிரெண்டு தான்! ஜூன் மூன்றும் நாள் ஆலடிக்கு முளை என்னும் ஊரிலே கூட்டம். ஆலடிக்கு முளை என்பது பட்டுக்கோட்டையின் ஓரப் பகுதியில் தீரமாக வேலை செய்யும் வீரர்களைக் கழகத்திற்கெனக் கொண்ட சிற்றூர். தோழர் ராசகோபாலர் என்னும் பெரியவரின் தலைமையிலே நாங்களும், தோழர் எம். ஆர். முருகையா அவர்களும்சொற்பொழிவு நிகழ்த்தினோம். அந்தக் கூட்டம் முடிந்து—கூடியிருந்த ஆயிரமாயிரம் மக்களிடத்திலே விடை பெற்று, அடுத்த கூட்டத்தில் கலந்துகொள்ள பனங்குளம் சென்றோம். அந்த ஊரை நாங்கள் அடையும் போது இரவு மணி பதினொன்று. அதற்குள் நாங்கள் வர மாட்டோம் என்ற செய்தியை பொது மக்களிடத்திலே கம்யூனிஸ்டு தோழர்கள் மிகவும் கஷ்டப்பட்டு பரப்பி விட்டார்கள். மக்கள் அவர்களை நம்பி ஏமாறுவதற்குள் ;நாங்கள் போய்ச் சேர்ந்துவிட்டோம். தோழர் மணிமொழி அவர்கள் தலைமையிலே நாங்களும், பேராவூரணி செயல்வீரர் அடைக்கலம் அவர்களும் பேசினோம்–கூட்டத்தில் சரிபாதி பெண்கள் குழுமியிருந்தனர். பனங்குளம் வட்டாரம் பார்த்திராத அளவுக்குஅத்துணை பெரிய கூட்டம். இரவு 1-மணி சுமாருக்கு கூட்டம் முடிவுற்றது.

ஜூன் 5-ம்நாள் கீழநம்மங்குறிச்சியென்னும் சிற்றூரிலே கூட்டம். பக்கத்து ஊர்களின் தொடர்பில்லாதசிற்றூர் அது. எவ்வளவு பேர் கூட்டத்திற்கு வந்திருக்க முடியும் என கருதுகிறீர்கள்? ஐயாயிரம் பேருக்கு குறைவில்லாமல் கூடியிருந்தனர். தோழர் செவந்தையன் தலைமையில் நான், இளங்கோ, அடைக்கலம், இலங்கை கலையன்பன், ந. தர்மலிங்கம், நடராசன் ஆகியோர் கருத்துரை வழங்கினோம். கார் புகமுடியாத அந்த ஊரிலிருந்து வண்டியில் ஏறி வயல் வெளிகளைக் கடந்து, பிறகு காரைப்பிடித்து அங்கிருந்து புறப்பட்டு தலைநாயர் என்னும் ஊருக்கு சரியாகப் பனிரெண்டு மணிக்கும் போய்ச் சேர்ந்தோம். பதினைந்தாயிரத்துக்குக் குறையாத மக்கள் அந்த நள்ளிரவிலே கூடியிருந்தனர். ஆயிரக்கணக்கான விவசாயிகள் தி. மு. கழகத்தின் கொள்கை விளக்கங்களை கேட்டுப் பூரித்தனர். தோழர் வைரக்கண்ணு தலைமையிலே கூட்டம் நடைபெற்று இரவு 2 மணிக்கு முடிவுற்று, அதற்கு மேல் ஆளுக்கொரு டீயக் குடித்து இரவு உணவை முடித்துக்கொண்டு திருவாரூர் புறப்பட்டோம். ஜூன் 6ம் நாள் மாலை. 6 மணிக்கு திருப்புகலூரில் தோழர் அரங்கையா தலைமையில் நாங்களும், அடைக்கலம், சௌரிராசன், திருச்சி எம். எஸ். மணி ஆகியோரும் பேசினோம். அங்கும்கம்யூனிஸ்டு தோழர்கள் கூட்டத்திற்கு போகக் கூடாதென்று விவசாயப் பெரு மக்களை தடுத்துவிட்டனர். ஆனால் விளைவு என்ன தெரியுமா? மாலை 6 மணிக்கு ஆயிரம் பேர்களாயிருந்த கூட்டம் ஏழு மணிக்கு ஆறுயிரம் ஏழாயிரம் பேருள்ள கூட்டமாகப் பெருகிவிட்டது. காரணம், பயமுறுத்தப்பட்டபாட்டாளிகள், இருட்டு வந்ததும், அந்த இருளில் மறைந்துகொண்டு முக்காடு போட்டுக்கொண்டு கம்யூனிஸ்டு தலைவர்கட்குத் தெரியாமல் கூட்டத்திற்குவந்துவிட்டனர், தி. மு. க. தரும் புது ஒளி பெற! திருப்புகலூர் கூட்டம் முடிந்து இரவு 10 லிருந்து 11 மணி வரையில் நெடுங் குளத்தில் தோழர் முகமது இபுராகிம் தலைமையில் பல்லாயிரவர் முன்னிலையில் நாங்களும் எஸ். எம் வைத்திலிங்கம், சிவன், நாகராசன், அடைக்கலம் எம். எஸ். மணி ஆகியோரும் சொற்பொழிவு நிகழ்த்திவிட்டு, அதே இரவு 12 மணிக்கு பொறையாறு கூட்டத்தில் கலந்து கொண்டோம். குதூகலமான வரவேற்புகளுடன் மாநாடுபோல கூட்டம் ஆரம்பமாயிற்று. தோழர் ஆபூபக்கர் தலைமையில் நாங்கள் பேசினோம்.

6-ம் பக்கம்

சித்தூர் மாவட்ட
தி. மு. கழக மாநாடுகள்

ஜூலை 10, 11 தேதிகளில்
பொதட்டூர்பேட்டையில் நடைபெறும்

சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர் :	தலைவர் :
அ. பொன்னம்பலனார்	எ. எல். சி. கிருட்ணசாமி
திறப்பாளர் :	திறப்பாளர் :
நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி	இராம. அரங்கண்ணல்

10-7-54 சனிக்கிழமை இரவு
புரட்சி நடிகர் எம். ஜி. ராமசந்திரன்
அவர் தம் குழுவினருடன் நடிக்கும்

இன்பக்கனவு

11-7-54 ஞாயிறு இரவு
நடிப்புக் கலைஞர் எஸ். எஸ். இராசேந்திரன்
அவர் தம் குழுவினருடன் நடிக்கும்

சந்திர மோகன்

வரவேற்புக்குழுத்தலைவர் :—எ. டி. கே. இராமசாமி.
தொண்டர் படைத் தலைவர் :—ஈ. என். கோதண்டபாணி
செயலாளர்கள்:-என். கே. எஸ். கணேசன், எஸ். கேசவன்

தலையங்கம்

சென்னை (2—7—54) வெள்ளி

பெண்ணுடை ஆண், :: :: நமது பிரதமர் !

"காமராசரைக்கண்டேன்—அவர் ஆணு, பெண்ணு, அலியா என்ற சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது. அவர் நிச்சயமாக அலியல்ல! ஆண்தான்—ஆனல் பெண்ணுடை அணிந்தஆண். உள்ளப்பாங்கைத் தான் குறிப்பிடுகிறேன்"

—என்பதாக வேலூரிலே நமது பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணு அவர்கள் குறிப்பிட்டார்கள். "நமக்கு பெண் என்றல் வெறுப்புமல்ல—ஆண் என்றல் அதிருப்தியுமல்ல—ஆனல் பெண்ணுடை அணிந்த ஆணே நாடகத்தைத் தவிர வேறெங்கும் கண்டிட விரும்பமாட்டோம்" என்ற கருத்தையும் அண்ணு வெளியிட்டார். "பெண்ணுடை" என்று சுட்டிக் காட்டியது, காமராசரின் வடநாட்டு பக்தியையும் காங்கிரஸ் தொடர்பையும், அவரையுமறியாமல் ஆரிய மாயையில் சிக்கிடும் பண்பையும்தான் என்பது யாருக்கும் விளங்கிடாமற் போகாது. பெண்ணுடைப் பிரதமர் என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் எண்ணிலாச் சொற்களை இகழ்ச்சி அகராதியில் தேடிப் பிடித்து வாரி இறைத்து வருகிருர் கனம் காமராசர்.

சின்னட்களுக்கு முன் திராவிட நாட்டுப் பிரிவினை என்பது ஒரு பேத்தல் எனக் குறிப்பிட்டு மகிழ்ந்தார், அவருக்குள்ளாகவே! இல்லை—இல்லை. மகிழச் செய்தார் மயிலாப்பூர் வட்டாரத்தை!

இதோ மீண்டும் சேறு பூசிக் கொள்கிருர்; நேரு பாதையிலே நடை போட்டு! ஒரு நாட்டின் பிரதமர்—முதல்வர்—எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள் பற்றி விவாதிக்கும் போதும்—அல்லது எதிர்க்கட்சியினர் கொள்கைகள் தவறுடையன என்று விளக்கிட முனையும் போதும் ஆதாரங்களைத் தேடிட வேண்டுமே தவிர, அலகாபாத்தாரின் அகராதியைத் தேடி அலையக்கூடாது முட்டாள் தனம்—பேத்தல்—இதுபோன்ற சொற்கள் நேருவின் சொந்தம். நேருவைப்போல் பெருமைபெற அந்த சொற்களைப் பிரயோகிப்பது மட்டுமே வழி எனத் தப்புக் கணக்கு போட்டோ என்னமோ, கனம் காமராசர் முட்டாள் தனத்தையும், பேத்தலையும் தனக்கு உரிமையாக்கிக் கொண்டிருக்கிருர்—ஆம்; அந்த வார்த்தைப் பிரயோகங்களைத் தான் குறிப்பிடுகிருேம்.

காஞ்சியில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் ஜூன் 28-ம் நாள் கனம் காமராசர் பேசும்போது குறிப்பிட்டாராம்—அது; இது!

"காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை உள்ள நாட்டில் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் நிலைநாட்ட வேண்டியது அவசியம். நாடு பிரிக்கப்பட்டால் தேசம் பலவீனப்பட்டுப் போகும். நாட்டை சிறு சிறு துண்டுகளாக—சிலர் முட்டாள்தனமாக கூறுவதுபோல்—பிரித்தால் தொல்லைகள் அதிகரித்து புதிய பிரச்சினைகள் தோன்றிவிடும்."

காமராசர் பேசியிருக்கிருர் இப்படி! நாடு பிரிப்பது நல்லதா—கெட்டதா—என்ற வாதம் பிறகு இருக்கட்டும், ஆயிரமாயிரம் ஆதாரங்களும், வரலாற்றுச்சான்றுகளும், காமராசருக்கு நாம் காட்டியிருக்கிருேம்—ஏன் நாடு பிரிய வேண்டுமென்பதற்கு! விவாதத்தின் தொடக்கத்திலேயே விவேகத்தை மறந்து வீணுரை பகருகிருரே என்பதை எண்ணும்போது வீரர்கள் நெஞ்சம் துடித்தே தீரும்.

"நாடு பிரித்தல் தகாது"—கூறட்டும் காமராசர்-நாமும் குவித்திடுவோம் பதில்களை!

"நாடு பிரிக்க இணங்கமாட்டேன்"—அபிப்பிராயத்தை வெளியிடட்டும் காமராசர்-நாமும் அவர் இணங்கும் வரையில் சுணங்காமல் சொல்லுவோம் நமது கருத்துக்களை!

"நாடு பிரித்திடவிடமாட்டேன்"-சூளுரைக்கட்டும் காமராசர்—நாமும் அவர் வீரத்தைப் பாராட்டி களத்திலே இறங்குவோம்—நாடு பிரித்த பின்னே உறங்குவோம்!

இப்படியெல்லாம் விவாத உரையோ—விளக்க உரையோ—வீர உரையோ ஆற்றுமல் வீணர் உரையல்லவா ஆற்றுகிருர், விருதுநகர் கோமான் பழுது நிறைப் பண்பால்! முட்டாள்தனமாம்! முதலமைச்சர் மொழிவதா இப்படி! காமராசர் சாதாரணமல்லவே—கனமாகி விட்டவர்! கூடாது காமராசரே கூடாது! ஆடாது ஆசையாது வாழலாம் என்று ஆணவம் பகர்ந்தவர் எல்லாம் இன்று மேடாகி, ஓடாகி, இருந்த இடம் சுடுகாடாகிப் போய் விட்டது! சரிதம் கற்றவர்கள் சொல்லி யிருப்பார்கள் தங்களுக்கு! இல்லையேல் துரிதமாக அவைகளைப் படித்திடத் துவங்குங்கள்,

தங்களைத் தெரிந்து தானே—தி. மு. கழகம், தெளிவாகத் தன் கருத்தைச் சொன்னது; காமராசரை பாராட்டுகிருேம்-கல்வித் திட்டச் சனியனை ஒழித்தமைக்காக—ஆனல் அவரை ஆதரிக்க மாட்டோம் என்று! அதற்குள் அதை மெய்யாக்கி விட்டீர்களே—அந்த வகையில் மகிழ்ச்சிதான்! ஆணு—பெண்ணு—அலியா-என்று தெரியாமல் நாடு, பிரசவ அறைச் செய்தியை எதிர்நோக்கி ஏங்கிக் கிடக்காமல் —

"பெண்ணுடை ஆண்" என்ற உண்மை இவ்வளவு விரைவில் வெளியானது நாட்டைப்பிடித்த "நல்லகாலம்" தான் போலும்!

"நாட்டைப் பிரித்தால் தொல்லைகள் அதிகரித்து புதிய பிரச்சினைகள் தோன்றிவிடும்"—காரமான வார்த்தைக்குப் பிறகு கனம் உதிர்த்த கனிவுச் சோல் இது வெங்க!

தொல்லைகள் அதிகரிக்குமாம்—புதிய பிரச்சினைகள் புறப்படுமாம்—நாடு பிரிப்பது கூடாதாம்!—இப்போது தொல்லைகள் அதிகரிக்காமல் இருப்பதாக எண்ணிக்கொண்டு காமராசர் கர்ஜிக்கிருர். அவரே—அதே கூட்டத்தில் விளக்கியிருக்கிருர்; "நாட்டில் ஏழ்மை பிரச்சினை இருக்கிறது; 85 சதவீதத்தினர் இதில் சேர்ந்தவர்கள்" என்பதாக!

85 சதவீதத்தினர் ஏழ்மைப் பிரச்சினையில் சேர்ந்தவர்கள் எனக்கணக்குக்கூறும் கனம் அவர்கட்கு நினைவூட்ட விரும்புகிருேம். நாடு பிரிந்தால் இதைவிட பெரிய தொல்லைகள் முளைத்துவிடாது—மாருகக் குறைந்திடும் என்று! 85 சதவீதம்! குறைந்த கணக்கு அல்லவே—நாடுபிரிந்தால்தான் குறைகள் அதிகரிக்கும் என்பதற்கு! குறையும் காமராசரே! நாடு பிரிந்தால் தொல்லைகள் கட்டாயம் குறையும்! கரையும் காங்கிரசிலேயிருந்து, நரையும் மூப்பும் கொண்ட வடநாட்டு ஏகாதிபத்யவாதிகளைச் சதமெனக் கொண்டு, அரசியல் துறையும், அதை கடைப்பிடிக்கும் முறையும் மறந்து, உரையில் கரைபிடித்தோராய் உலவும் கனம்களுக்கு வேண்டுமானல் நாடு பிரிந்தால் தொல்லை குறையும் என்ற நற்சேதி தெரியாமலிருக்கலாம்—நமக்குத் தெரியும்—நல்லறிவாளர்கள் அனைவர்க்குமே அது புரியும்.

"எம்மைக் குறைகூறும் கட்சிகளுக்கு மக்கள் மத்தியிலே வைக்க மாற்றுத்திட்டம் கிடையாது."

—இதுவும் காமராசர்தான்! காஞ்சியில் உரைத்ததுதான்! மாற்றுத் திட்டம் கிடையாதாம்—காற்றுவாக்கில் வீசுகிருர் வார்த்தைகளை! பகிரங்கமாக அறிக்கை விட்டுக் கேட்பாரா காமராசர்; தி. மு. கழகத்தை—மாற்றுத் திட்டம் தாருங்கள், என்று! அல்லது படித்துத்தான் பார்க்க நேரமிருக்குமா; தி. மு. கழகம் அளித்துள்ள மாற்றுத் திட்டங்களை! சற்று எம்மோடு பின் தொடரட்டும்—மலை போல் குவிந்திருக்கும் செல்வங்கள் முடங்கிக் கிடக்கும் மூலைகளைக் காட்டுகிருேம்—அதைப் பயன் படுத்தும் மூளைகளையும் காட்டுகிருேம்—வருவாரா காமராசர்—திட்டம் பெற மட்டுமேதான் அழைக்கிருேம்! தெளிவு தர மாத்திரமேதான் கூப்பிடுகிருேம்—துணிவு உண்டா நமது திட்டங்களை ஏற்றிட அவருக்கு !

ஆலை—அங்கே ஜுவாலை—அதன் மத்தியிலே வேலை செய்யும் ஏழை—அவன் வாழுமிடம் நடுச்சாலை—அந்த ஜீவனுக்கு இன்பம் தரும் திட்டம்—சீருடைய திட்டம்—ஏருடையோர் ஏற்றம் பெறும் திட்டம்—எம்முடைய பாசறையின் திட்டம்—தேவையா காமராசரே—தருகிருேம்; கேளுங்கள்; அல்லது தந்திருக்கிருேம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்!

"இரவோடு இரவாக சுபீட்சத்தை உண்டாக்கும் மந்திர சக்தி இருந்தால் அவர்களை மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டு மகிழ்ச்சி அடைவேன்"

இதுவும் காமராசர் ஆசைதான்! கிண்டல் என்ற முறையிலே அவர் பேசிய பேச்சுப் போலும் இது! இரவோடு இரவாக சுபீட்சமுண்டாக்கும் மந்திரசக்தி தேவையாம்; மந்திரி விரும்புகிருர்! இரவிலே சுபீட்ச முண்டாக்கும் மந்திர சக்தி இன்னதென்று தெரியாது போலும் பிரமச்சாரியாக உள்ள பிரதமருக்கு! நாமோ—விளக்க முடியாத நிலைமையிலிருக்கிருேம். மந்திர சக்தி—அந்தசக்தி கொண்டவரை மந்திரியாக்குவாராம்—ஆச்சாரியாருக்கு ஏற்பட்ட ஆவல் அமைச்சரானதும் அன்பர் காமராசருக்கும் ஏற்படுகிறது!

மந்திரத்தால் மாங்காய் அடிக்கப்பார்த்த மகான் ஆச்சாரியாரின் பாதையிலே காமராசரும் ஏன் போகிருரோ புரியவில்லை நமக்கு! மாநிலத்தை ஆளவந்த யாரும், சுபீட்சம் உண்டாக்க மந்திரவாதிகளை நாடியதில்லை! இங்குதான் அந்த வேடிக்கை நடைபெறுகிறது. மாநிலம் சுகம் பெற நாம் மந்திரியை நாடுகிருேம்—மந்திரியோ மந்திர சக்தியை நாடுகிருர்—விபரீதமான வேடிக்கைதான் இது.

இப்படிபெல்லாம் வேடிக்கை புரிகிறவர்கள் ஆட்சி நடத்துவதோடு மட்டுமில்லாமல்—ஆதிபத்ய வடநாட்டிற்கு [6-ம் பக்கம்]

யார் அந்த ‘மாபாவி’கள் ?

அன்புள்ள குமார்,

நெடு நாட்களாயிற்றே கடிதமெழுதி, நெஞ்சம்கூடபுண்ணாகி ஆறிப்போய் விட்டதே என்று எண்ணுகிறாயா? தவறு, தவறு, அப்படி எண்ணாதே. நீயும் நானும் ஒன்றாகத்தான் படித்தோம். எந்தத் தமிழ் புலவர் உனக்கு சங்க இலக்கியங்களைக் கற்றுத் தந்தாரோ, அவர் தான் எனக்கும் ஆசானாக இருந்தார். கனகவிசயன் தலையிலே செங்குட்டுவன் கல் தூக்கி வைத்த கதையை வகுப்பிலே புலவர் விளக்கும்போது நீ விசனப் பட்டாயே ஒரு நாள், அதைக்கூட இன்னும் நான் மறக்கவில்லை குமார். அன்றே நான் உன்னைப்பற்றி முடிவு கட்டி விட்டேன், நீ என் வழிக்கு வர மாட்டாய், என் லட்சியம் உனக்கு எட்டிக்காய் என்று. நீ இப்போது காங்கிரஸ் வாலிபர் சங்கத்தின்செயலாளன், நான், தாயகத்து விடுதலைக்கு அரும்பணி யாற்றும் மக்கள் கட்சியில் ஒரு தொண்டன். ‘வேளைக்கொரு உடை, நாளைக்கொரு மேடை’ கிடைத்தால் போதும் என்ற மனோபாவம் வளர்ந்து புறையோடிப் போயிருக்கிற பூமான்கள் கூடாரத்திலே உலவுகிறவன் நீ. ஆனால் நான் அப்படி இருக்க முடியாதபடி வளர்ந்து வந்திருக்கிறேன் என்பதை நீ அறிவாய். இதை யெல்லாம் நான் ஏன் இப்போது கூற வேண்டும்? உனக்கும் வேதனை! எதிர் நீச்சல் போட்டு கரையேற வேண்டியவன், ஓடுகிற ஆற்றோடு போகிறானே, என்ன ஆவானோ என்று எனக்கும் உன் பற்றிய கவலை! விஷயத்திற்கு வருகிறேன். குமார், காங்கிரசின் நிர்வாகத்தைப் பற்றியோ, அல்லது மந்திரிமார்களின் மதி (!) மிகு உரைகளைப் பற்றியோ காரணத்தோடு கண்டித்தால் நீ கோபிக்க மாட்டாய் என்றே கருதுகிறேன். காரணம் நீ படித்தவன்—பிரச்சாரகன்.

கனம் சுப்ரமணியம்—அவர் தான் உன் திருமணத்திற்கு வாழ்த்து அனுப்பினாரே கோவைச் சீமான் -- சென்ற வாரம் பொள்ளாச்சிக்குப் பக்கத்தில் நாகூர் என்ற ஊரில் அவர் பேசிய பேச்சைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? கட்சி ரீதியிலே நான் உன்னைக் கேட்கவில்லை—கட்சி அரசியலை கசக்கி எறிந்துவிட்டு நெஞ்சிலே கைவைத்துப் பார்த்துவிட்டுப் பேசு. கற்றறிந்த அமைச்சரின் சொற்பொழிவு என்றா அதை கருதுகிறாய்? அனைத்தும் ஆண்டவன் செயலென்பது தன் திறமையிலே—ஆற்றலிலே அவநம்பிக்கை கொண்டவர்கள் பேச்சில்லையா? அந்த முறையிலா அரசாள வந்தவர்கள் பேசுவது? எல்லாம் அவன் செயலென்றால், அரசாங்கம் ஏன், அமைச்சர்கள் ஏன்? நீதி மன்றங்கள் எதற்கு, நீ சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சிதான் எதற்கு? “தெய்வமில்லாது வாழ முடியாது—ஒரு சில தமிழ் பண்டிதர்கள்கூட நாஸ்தீகப் பிரச்சாரத்திலீடுபட்டு மாணவர்களை கெடுத்து வருகிறார்கள்; அவர்களெல்லாம் இவ்வுலகத்திலேயே நரகம் அனுபவிப்பார்கள்” என்று ஆத்திரம் பொங்கப் பேசியிருக்கிறார் அமைச்சர். நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்மாணவர்களிடம் பஜனைக் கூடத்தில் உபதேசிக்க வேண்டிய பக்தோபதேசத்தையா ஒரு மந்திரி—அதுவும் கல்வி மந்திரி பேசுவது?

தமிழ் பண்டிதர்கள் நாஸ்தீகப் பிரச்சாரம் செய்கிறார்களாம் — அதுவும் வள்ளுவரின் பெயரால்! குமார், திருக்குறள் உனக்குப் புரியாத வடமொழி மந்திரமல்ல, நீயே சொல், “இறந்து முயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான்” என்ற குறளுக்கு நீ என்ன பொருள் கூறுவாய்? பிச்சை யெடுத்து வாழ வேண்டியநிலை ஒருவனுக்கு ஏற்பட்டால் இந்த உலகைப் படைத்தவன் உருக்குலைந்து போகட்டும் என்று தானே அதற்குப் பொருள். இதைத் தானே பாரதியாரும் சொன்னார் ‘தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்’ என்பதாக.

இதுபோன்ற பாடல்களுக்கு பொருள்கூற வேண்டிய தமிழ் புலவர்கள் உள்ளதை உள்ளபடி தானே சொல்லுவார்கள்! வள்ளுவன் பெயரால் நாஸ்தீகப் பிரச்சாரம் நடைபெறுகிறதாம்—பார்த்துக்கொள் தோழனே பார்த்துக்கொள்! நாஸ்தீகப் பிரச்சாரம் செய்யும் அந்தப் புலவர்கள் இந்த உலகத்திலேயே நரகம் அனுபவிப்பார்களாம். இந்த ‘பூச்சாண்டி’ வேலையையும்’ காட்டி யிருக்கிறார் சுப்ரமணியர். வாழ் நாள் முழுதும் வாழ்வு மாயம், வையகம் அநித்தியம் என்று சொல்லிக்கொண்டிருந்த ரமணர், வாழ்வின் இறுதிக் கட்டம் வரை கொடு நோயின் முதலைப் பிடியில் சிக்கித் தவித்ததை—நீ மறந்திருக்க மாட்டாய்; மலை அடி வாரங்களில், மாமுனிவர் ஆஸ்ரமங்களில் காவி உடையின் மறைவில் வளர்க்கப்பட்ட கஞ்சா செடிகளை காக்கி உடை போலீஸ்காரர்கள் கண்டுபிடித்தது கண்டு, வையகத்தோர், காரி உமிழ்ந்து, ஏடா மூடா ஏனடா உனக்கு இந்த போலி வேடம் என ஏளனம் செய்ததையும், அதனால் வெட்கித் தலை குனிந்து விபரீத வியாக்யானம் தந்த வேடதாரிகளையும் இன்னும் உன் நெஞ்சை விட்டு அகற்றி யிருக்கமாட்டாய்; குறும்புப்பார்வை, குறு குறுத்த நெஞ்சு, இவைளோடு குற்றக் கூண்டிலே நிறுத்தப்பட்டு ‘நீவிர் அந்தப் பெண்ணைக் கற்பழித்ததுண்டா என நீதிபதியும் வழக்கறிஞரும் மாறி மாறிக்கேட்கப்பட்ட ‘ஆதீனங்களின் அர்த்த ராத்திரி நாடகங்கள்’ இன்னும் நீதி மன்றங்களை விட்டுப் போகவில்லை என்பதையும் நீ ஒப்புக் கொள்வாய் — இவர்களெல்லாம் பக்தர்கள்—சிவாய நம வென்று சிந்தித் திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளுமில்லை எனக் கூறி ‘யோகப்பியாசம்’ செய்யும் சிவ நேசச் செல்வர்கள். இந்த உலத்தில் இவைகளைக் காட்டிலும் நகரம் வேறு என்ன இருக்கிறது. கொடிய நோய், கையும் களவுமாக கஞ்சா செடி, கற்பழித்ததாக வழக்கு!

நாஸ்தீகம் பேசினால் நரகம் தான் கிட்டுமாம்? நீதி சொல்லுகிறார் நிதி அமைச்சர்.

குமார், நீ அறிந்த மட்டில், இப்பேர்ப்பட்ட கொடுமைகளையா தமிழறிஞர்கள் செய்து வருகிறார்கள்?ஜாதிஇல்லை என்று சொல்லியிருக்கலாம்; சர்வேஸ்வரன் ஒருவனே எனக்கூறியிருக்கலாம். இதற்குப் பரிசு நரகம் தான் என்றால் ஊருக்குழைத்த உலகத்து நல்லறிஞர்கள் அனைவருமே இவ்வுலகில் நரகத்தை அல்லவா அனுபவித்திருக்க வேண்டும்! மகேஸ்வரன் தயவு வேண்டாம் என மண்ணெண்ணைக் கிணற்றைக் கண்டு பிடித்து பெரும் பொருளீட்டி வள்ளல்பட்டம் வாங்கிய ராக்பெல்லர் நரகத்தையா அனுபவித்தார்! மின்சாரம் கண்டு பிடித்து, ஆண்டவனுக்கு பக்கத்திலே சுடர்விட்டெரியும் குத்து விளக்குகளின் வாழ்வை நெறித்த எடிசன் எந்த் நரகத்திற்குப் போனார்? நாஸ்தீகப் பிரச்சாரத்தையே தொழிலாகக் கொண்டு செல்வம் சேகரித்த இங்கர்சால், கடவுளைப்பற்றிக் கவலைப்படாதே என்றுரைத்த பேரறிஞன் பெர்னாட்ஷா, இவர்களெல்லாம் நடுத் தெருவிலே அலைந்தார்களா! நாதியற்றவர்களாய் தூக்கிட்டுச் செத்தார்களா? எங்கே இருக்கிறது அவர்கள் அனுபவித்த நரகம்? குமார், இதையெல்லாம் நீயே சிந்தித்துப்பார்—எனக்கு அதிகப் பிரசங்கி என்ற பட்டத்தைக் கொடுத்து விடாதே! வேலியை மட்டும் வலுவாகக் கொண்ட கட்சி நீண்டநாள் வாழ்ந்ததில்லை—உரிமைக்கு முதலிடம் கொடுத்த கட்சி அழிந்துபட்டதில்லை. எண்ணிப் பார், வருகிறேன்.

அன்பன்

பொன்முடி

வெற்றி விழாவில் வெற்றி விழா !

★

குலதர்மக் கல்வித் திட்டம் ஒழிந்தது குறித்து சென்னை மாநிலமெங்கும் வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. பள்ளிச் சிறுவர்கள், சிறுமிகள், அவர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்கள், ஆசிரியர்கள், அனைவருமே இந்த விழாவில் பெரும் பங்கெடுத்து இன்புற்றனர். இந்தப் பெருமகிழ்ச்சியை நாமடைய “அவர்களுக்கு” விருப்பமில்லைபோலும்! எப்படி இருக்கும் அந்தப் பெருந்தன்மை? காந்தியாரைச் சுட்டுக் கொன்றபோது வாய்மூடி மௌனியாக இருந்தவர்களாயிற்றே அவர்கள்!

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த போடி நாயக்கனூரில், அவ்வூர் தி. மு. கழகத் தோழர்கள் உள்ளூரிலுள்ள எல்லா ஆரம்ப பள்ளிகளிலும் கல்வித் திட்ட ஒழிப்பு தினத்தன்று இனிப்பு வழங்கினார்களாம். அதில் வி. நி. ஆரம்பப் பள்ளியில் மட்டும் அந்தத் தலைமை ஆசிரியர்! (பார்ப்பனர்) இனிப்பு வழங்க அனுமதி கொடுக்க மறுத்துவிட்டாராம். தி. மு. கழகத் தோழர்கள் அமைதி காத்து பள்ளி முடியும்வரை வெளியில் நின்றுபார்த்தனர். ஆனால் அந்த ஈகை(!)மிக்க தலைமை ஆசிரியர் பகல் உணவுக்குக்கூட பாலர்களை வீட்டுக்கனுப்பவில்லையாம். எவ்வளவு நேரம் தான் அந்த ‘ஆரியகுல மகிபர்’ அரண் அமைக்கமுடியும்! மணி ஒலித்தது. மாணவர்கள் புற்றீசலென வெளிவந்தனர். கழகமாவீரர்கள் கட்டுப்பாடோடு இருந்து இனிப்பு வழங்கி வெற்றிவிழாவில் வெற்றிவிழா கொண்டாடினர்.

நேற்று! இன்று! நாளை?

★

ஒரு காலத்தில் ஜப்பான் நாடு தன்னை வலுப்படுத்திக் கொள்ள பிறநாட்டுத் தொடர்புகளை அறுத்துக் கொண்டதாக வரலாற்றிலே படித்திருக்கிறோம் — பண்டித நேருவே 'உலக சரித்திரம்' என்ற நூலில் எழுதியிருக்கிறார். அதுவும் அந்த ஜப்பானிய விவேகிகள் மதகுருக்களையே பெரிதும் வெறுத்தார்கள்; — கதவைத் தாளிட்டுக் கொண்டார்கள்; என்று பண்டிதர் கூறியிருக்கிறார்.

ஆனால் அந்தப் பண்டிதரின் அரியாசனம், ஆத்மீக பலத்தையே நம்பிக் கொண்டு பிறநாடுகளின் தொடர்பை அறுத்துக் கொள்ளத் துணிந்திருக்கிறது.

நாட்டுக்கு நாடு தூதர்களை அனுப்புவது அந்தந்த நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்க்கத்தான் என்பதை அனைவரும் அறிவர். இந்திய அரசாங்கம் இதை மனதிலே கொண்டதாகத் தெரியவில்லை. சென்ற ஆண்டு லிஸ்பனிலுள்ள இந்திய தூதராலயத்தை மூடினார்கள் — இப்போது தென்னாப்பிரிக்காவிலுள்ள தூதராலயத்தையும் மூடிவிட இந்திய சர்க்கார் முடிவு செய்து விட்டது. காந்தியார், அறப்போர் களத்திலே குதித்ததும், தில்லையாடி வள்ளியம்மை தீரப்பணியாற்றியதும் தென் ஆப்ரிக்காவில் தான் —இப்போது தமிழகத்தார் பலர் தொல்லைக்கு இலக்காகி துன்புற்று துரும்பாக இளைத்து வருவதும் அங்குதான் — என்றாலும் ஆளும் வர்க்கத்தினர் தூதராலயத்தை மூடதிட்டமிட்டு விட்டார்கள் — ஆமாம், அங்கு வதியும் தமிழர்களை கைவிட்டு விட இந்திய அரசாங்கம் தீர்மானித்து விட்டது. தூதாலயத்தையே தங்களின் கடைசித் துணையாக எண்ணியிருந்த தமிழர்கள் நம்பிக்கை மோசம செய்யப் பட்டார்கள்.

தன் திருமகளை—தமிழ்குமரியை தரணிக்கு எடுத்துக் காட்டாக போர்ப்பரணி பாடவைத்த வீர மிக்க சமுதாயம், உலகின் எங்கோ ஓர் மூலையில் அனாதையாக விடப்பட்டது ஆளவந்த அகிம்சா மூர்த்திகளால்.

தூதராலயத்தை மூடுவதற்குக் காரணம்அந்த சர்க்காரின் தொல்லைகள் தான் என்று சொல்லப்படுகிறது. தொல்லைகளுக்கு அஞ்சி தூதராலயங்களை மூடிவிடுகிற அரசாங்கத்தை உலகில் வேறெங்கும் நாம் காண முடியாது. தொல்லைகளைத் தாங்கி ஆங்காங்கே வாழும் சொந்த நாட்டாரின் துயரைத் துடைக்க முடியாதவர்கள் ஏன் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும், அலங்காரப் பதுமைகளாய் அமர்ந்திருக்க வேண்டும்? அதுவும் வெளிநாட்டு இலாகாவோ, டாலர் எண்ணெயில் ஒளிவிடும் ஆசியஜோதி பண்டிதநேருவைச் சார்ந்தது? அவருக்கோ ஜெகமெங்கும் செல்வாக்கு? ஆனாலும் தமிழர்களின் கண்ணீர் ஊற்று இன்னும் அடைபடவில்லை. தென்னவர்களின் வேதனைப் சுடுமூச்சு அன்னவரின் புகழ் ஜோதியைத்தான் அணைக்கும். பண்டிதர் இதை உணர மாட்டார். "தொல்லை ஒழிந்தது, நேற்று லிஸ்பன், இன்று தென் ஆப்ரிக்கா, நாளை இலங்கை" என்றுதான் எண்ணி மகிழ்வார். அவருக்கென்ன, கடல் தாண்டி, எல்லைக் கப்பால் அவதியுறுவோர் காஷ்மீரிகளல்லவே, தமிழர்கள் தானே !

ஜூலை 16!

முரசொலி -
போராட்ட சிறப்பிதழ்
காவியமும் — ஓவியமும் தாங்கி
வெளிவரும்
கழக முன்னணி வீரர்கள்
அனைவரும் எழுதுகிறார்கள்.

வாழ்வே யில்லான்!

[நாஞ்சில் கி. மனோகரன்]

●

ஏர்முனையில் எந்நாட்டான்! உடலைத் தீய்க்கும்
எரிவெயிலிலென் தமிழன்; இகலோர் வீழும்

போர் முனையில் இந் நாட்டான்; வானைக் கொஞ்சும்
பிணக்குவியலவன் சொத்தாம், இரத்தம் கண்ணீர்

சீர்வரிசை தமிழாது; குப்பை மேட்டில்
குந்துவதும் தமிழ் உடலம்; உழைப்பை விற்றுப்

பார்பழிக்க வெளி நாட்டின், துயரக் காட்டில்
சாவது மிவ்வள நாட்டான், வாழ்வேயில்லான்!

●

வளமிக்க வயல் வெளிகள், வண்ணக் காவே!
வீழ்புனல்கள், எழுமருவி, பாயுஞ் சிற்று(று)

உளமீர்க்கும் மாநதிகள் கனியுஞ் சோலை
ஊடாடு மெழில் நாடென் திருநாடன்றோ?

அளவுண்டோ கவின்பொழியும் இன்பக் காட்சிக்
கிணையுண்டோ? அழகுப் பெண் நடனக் காட்சிக்

களவின்றே! எனினும் இன்றெந் நாட்டான் காண்
அங்கந்தோ ஆழ்குழியில்! வாழ்வே யில்லான்!

●

செம்பைத், தங்கத்தைக் கண்ணாடிப் பீங்கான்
தாமிரத்தோ டயத்தை, மைக்கா, சிற்கண்

நம்பித்தான் வாழ்ந்திடுதற்குண்டே. எஃகு
நல்லிரும்பு, நிலக்கரியோ டிணைந்த துத்தம்

வெம்பிடுவர் பிறநாட்டார், வண்ணப்பௌவம்
வாரிக்கொட்டும் முத்தைக்கண்டே! உண்டே

நம் நாட்டில் எல்லாம்! இல்லா வொன்றில்லை!
நன்றெனினுமின்றவனோ? வாழ்வேயில்லான்!

மஞ்சள் நதி ....

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

எழு ஓடி மறைந்த பின்னரும் வறுமைச் சகதியிலேதான் இந்த உபகண்டத்து மக்கள் வாழ்கின்றார்கள்.

ஆனால் சீனத்திலோ செல்வம் கொழிக்கிறது. மஞ்சள் நதி ஓரத்தை சுபிட்சம் கொஞ்சி விளையாடும் மஞ்சமாக மாற்றியமைத்து விட்டான் சூ-என்-லாய். பற்பல ஆண்டுகள் உள் நாட்டுப் போரிலே ஈடுபட்டு—வீடிழந்த மக்கள் — மேடாகி விட்ட மாளிகைகள்—தரிசு நிலங்கள்-இந்த அளவில் இருந்த நாட்டில் "இந்திர போகத்"தைக் குடியேற்றிவிட்டார்கள், அவர்கள்! இப்போது உலக அரசியல் பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்பி இருக்கிறார்கள்!

ஆனால் நமது கங்கைநதி தீரத்தார்களோ ஏட்டுச் சுரைக்காய்களைப்பயிர்செய்து-போலிகௌரவத்துள் புதைந்து மக்கள் நன்மையை மறந்து ஆண்டுகளைப் போக்கி விட்டார்கள். இங்கோ 1947 ஆகஸ்ட் 15-ல் வெள்ளைக்காரன் வெளியேறும் போது 24 பல்கலைக் கழகங்கள்—833 கோடி மதிப்புள்ள ரெயில்வே பாதைகள்—ஒன்றரை லட்சத்துக்கு மேற்பட்ட கூட்டுறவு சங்கங்கள் —ஆயிரத்து ஐநூற்றுக்கு மேற்பட்ட தொழிற் சங்கங்கள் —அதனிலும் மேலாகரிசர்வ்பேங்கியில் 1179 கோடி பெருமான ரொக்கம்—இவை யெல்லாம்வெள்ளைக்காரன் கொள்ளையடித்தது போக மீதமுள்ள முதலீடுகள்—இவைகளெல்லாம் இருந்தும் கூட இந்திய உபகண்டத்தில் வளமையில்லை; வாடி நிற்கும் மக்கள் மனதில் வலிமை இல்லை.

அங்கோ—பிண மேட்டிலே சுதந்திரப் பண் எழுப்பிய சூ—என்—லாய் "பாரீர், எமது பொருளாதாரவளத்தை" என்று மார்தட்டி உலகத்தைப் பவனி வருகிறார். அந்த சூ—என்—லாய் தான் நேருப் பிரதமரைச் சந்தித்திருக்கிறார். அவர் உள்ளம் உண்மையிலேயே இந்த நிலைமையைச் சிந்தித்திருக்கும்; அது நிச்சயம் ஏளனச் சிரிப்பை சிதற விட்டிருக்கும் — "கையாலாகாதவர்களே – வாய்த்திறனால் வலிமைதனைச் சேர்க்க முடியாது. கனவு உலகத்துக்கு பாதை அமைக்கும் பிரதமரே! செயல் படும் திட்டம் வேண்டும்—அப்போதுதான் நமது நாட்டைப் பீடித்திருக்கும் குட்டம் அகலும்" — என்றபடி வார்த்தை மாலையை அவரது இதயம் கோர்த்திருக்கும் — வாய் சொல்லா விட்டாலும் அவரது மனம் இப்படிச் சொல்லித்தான் இருக்கும். ஃ

முறிச் சீட்டால் முடியாது!

○

அயர்ந்து தூங்கும் குழந்தையையும் கிள்ளிவிட்டு 'ஆராரோ' பாடுவது நல் அன்னையின் செயலாகாது. இந்தக் கெட்ட பெயர் இந்திய அரசாங்கத்திற்கு கிடைத்து நாளாயிற்று என்றாலும் அதை புதுப்பித்துக் கொள்வதில் இந்திய சர்க்கார் தயங்கியதில்லை.

தீண்டாமையை எந்தஉருவத்திலும் கடைப்பிடிப்பதில்லை என்று வாக்குறுதி யளித்து முறிச்சீட்டு ஒன்றில் கையெழுத்திடுமாறு அரசாங்க ஊழியர்களை கேட்டுக் கொள்வதென இந்திய சர்க்கார் ஆராய்ந்து வருகிறதாம். இந்தச் செய்தியை இந்திய அரசாங்க செய்திப் போக்குவரத்து அமைச்சர் ஜகஜீவன்ராம் பாட்னாவில் கூறியிருக்கிறார்.

தீண்டாமையை ஒழிக்க முறிச்சீட்டு—அதேநேரத்தில் அர்ச்சகர்கள் மாநாடு, வடகலை, தென்கலை தகராறு இவைகளுக்கு ஆதரவு — ஆசீர்வாதம்! எப்படி ஒழியும் தீண்டாமை? செப்படி வித்தை என்று தானே மக்கள் கருதுவர்!

வலங்கை....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மறுநாள் 7 ம் தேதி சீர்காழி யில் சுமார் முப்பதாயிரம் மக்க ளின் மத்தியிலே முன்னேற்ற முரசு ஒலித்தது. தோழர் சண் முகம் தலைமையில் நாங்களும், தோழர் ஒளி அவர்களும் சொற் பொழிவாற்றினோம்.

மறுநாள் 8-ம் தேதி மாயவரம் பொதுக் கூட்டம். கேட்க வேண்டுமா அதன் சிறப்பை! மாணவர் கழக ஆண்டு விழா. தோழர் மீனாட்சி சுந்தரம் தலை மையில் தோழர்கள் கரிகாலன், செயல் சீயம் கிட்டப்பா, ஆகி யோர் பேசியபின் நாங்களும் பேசினோம்.

தஞ்சை மாவட்டத்து சுற்றுப் பயணம் இத்துணை வெற்றிகர மாக இருந்ததற்கு காரணம்— அமைத்துக் கொடுத்த இளங் கோவின் உழைப்பும், தி. மு. கழகத்தின் சிறப்பும் காரணங் கள் என்பதைவிட, கூட்டங்கள் நடத்திய தோழர்களின் திறமை காரணம் என்பதைவிட தலை யாய காரணம், ஒன்றிருப்பதை நாங்கள் கண்டோம். ஆம்; தஞ்சை மாவட்டத்து விவசாயப் பெருங்குடி மக்கள் யாரையோ நம்பி கை விடப்பட்டிருக்கிறார் கள். அப்படி கைவிடப்பட்டவர் கள் தி. மு.கழகத்தின் துணையை நாடுகிறார்கள். உழவர் பகுதி யிலே தி. மு. கழகம் நேரடியாக இறங்கி வேலை செய்ய வேண்டு மென்று விரும்புகிறார்கள். உழ வர் கழகம் என்ற பெயராலோ— உழவர் முன்னேற்றக் கழகம் என்ற பெயராலோ—அல்லது உழவர் பொதுவுடமைக் கழகம் என்ற பெயராலோ—தி. மு. க. தனி இபக்கம் கோற்றுவித்து தொண்டாற்ற வேண்டுமென்ற ஏகோபித்த குரலை நாங்கள் போன பக்கமெல்லாம் உயர்த்திக் காட்டினார்கள். தி. மு. கழகம் பொதுக்குழுவில் தஞ்சைத் தோழர்களின் எண்ணத்தைப் பற்றி ஆராயுமென்றும், மாவட் டக் கழகம் அதுபற்றி சிந்தித்து பொதுக்குழுவின் முன்னே அந்தப் பிரச்சினையின் முழு உருவத்தை தெளிவான விதத் தில் வைத்திடுதல் நலமென்றும் நாங்கள் எம்மிடம் பேசிய தோழர்கட்கெல்லாம் கூறினோம். உழவர் கழகமென தனி இபக்க மோ— அல்லது உழவர் பிரச்சி னையில் தி. மு. க. என்ற பெயரா லேயே நேரிடையாக தொண் டாற்றுவதோ எதுவும் தனிப் பட்டவர்கள் செய்யக்கூடிய முடிவு அல்ல. பொதுக்குழுதா வேண்டிய முடிவாகும். இந்த நிலைமையை விளக்கிய பின்னரே ஆர்வத்தால் உந்தப்பட்ட அரு மைத் தோழர்கள் ஆயிரமாயிரவர் திருப்தி கொண்டனர்.

இத்தகைய புதிய எழுச்சி பூத்திருக்கும் தஞ்சைத்தரணி திராவிட முன்னேற்றக் கழகத் தின் வலிவும், பொலிவுமுள்ள கோட்டையாக மாறிவருகிறது. ஏராளமான கிளைகள்—அங்கெல் லாம் எழுச்சியுள்ள காளைகள்—எங்கள் சுற்றுப் பயணம்— எட்டு நாட்களில்— ஏறத்தாழ பதினைந்து நிகழ்ச்சி களில் கலந்து கொண்டோம். இதோ — தஞ்சை யில் சம்பத், முழங் கிவருகிறார். அவர் நிகழ்ச்சி முடிந்த தும், என். வி. நட ராசன் துவங்குகி றார் சுற்றுப்பயணம் தஞ்சையில்!

தஞ்சை நமது பழைய கோட்டை அது இப்போது நன்கு பழுதுபார்க் கப்பட்டுபுதியபலம் பெருகிறது. நல்ல நேரம்—மிக நல்ல நேரம்!--மாவட்டக் கழகம் ஆர்த் தெழுந்துபணிபுரிய வேண்டிய மிகநல்ல நேரம் எனச்சொல் லிக்கொண்டு, நாஞ் சில் மாவட்டம் புறப்படத் தயாரா னேன் நான்.

(தொடரும்)

[தலையங்கம் 3-ம் பக்கம் தொடர்ச்சி]

கங்காணிகளாகவும் அமைந்து கொண்டு—அதை எதிர்க்கும் நம்மை நாவில் நரம்பின்றி வசை பாடுகிறார்கள்; முட்டாள்தனம்—பேத்தல் என்றெல்லாம்!

இவர்கள் எதிர்காலம் புரிந்துதான்—ஆதரிக்கவில்லை—என்பதை அழுத்தம் திருத்தமாக நாம் சொல்லி வந்தோம்!

வேலூர் மாநாட்டில் முழங்கிய அண்ணா, குடியாத்தம் தேர்தல் பற்றி பேசும்போது கூட,

"பெரியார் காமராசரை எதிர்க்கச் சொன்னால் எதிர்க்கிறோம்" என்றாரே தவிர—ஆதரிக்கச் சொன்னால் காமராசரை ஆதரிக்கிறோம், என்று கூறிடவில்லை. அதிலே தான் அரசியல் தெளிவு இருக்கிறது — திராவிட நாட்டை ஒப்பாதவர்—ஒப்பாதவர்மட்டுமல்ல; முட்டாள் தனம், பேத்தல், எனக் காரசாரமாகக் கண்டிப்பவர்—மகான் ஆச்சாரி யாரைப் போலவே, திருவள்ளூர் கூட்டத்திலே "மழை பெய்வது வருண பகவான் அருள்" என திருவாய் மலர்ந்தருளியவர் — நாட்டின் ஏழ்மை நிலையை எதிர்க்கட்சிகள் தன் சுய நலத்துக்காக பயன் படுத்து கின்றன என்று நம்மையும் இணைத்துப் பழி யுரைப்பவர் — மாற்றுத் திட்டம் இல்லாதவர்கள் என்று நம்மையும் சேர்த்து பரிகாசம் புரிகிறவர் — அத்தகையவரை நாம் எப்படி ஆதரிக்க முடியும்.

விபீஷணனைவிட இராமன், மேல் என்றுதான் கூற முடிகிறதே தவிர வேறொன்றும் கூறிடத் தோன்றவில்லை நமக்கு! இதை மனதில் வைத்துத்தான் அறிஞர் அண்ணா அவர்கள்—எதிர்ப்பதாயின் சொல் லுக-இப்போதே எதிர்க்கிறோம்-என்ற வாசகத்தை வேலூரில் வெளி யிட்டிருக்கிறார். காமராசரை நாம் முன்பும் எதிர்த்தவர்கள் தான்! சென்ற பொதுத்தேர்தலில் காமராசருக்கு எதிராக நமது ஒப்பந்த ஏட்டில் கை எழுத்திட்ட ஒரு தோழரைத்தான் நாம் ஆதரித்திருக்கி றோம்—இப்போது நாம் யாரையும் ஆதரிக்கும் நிலையில் இல்லை; குடியேற்றத்தில்!—காரணம், காமராசர் பெண்ணுடை ஆண் — அவரை எதிர்க்கும் ஒருவர் கம்யூனிஸ்டு—திராவிட நாட்டு எதிரி!— இன்னொருவர் திராவிடர் கழகத்திலிருந்து தேர்தலுக்காக விலகி போட்டி யிடுகிற நண்பர். அவரைப் பெரியார் ஆதரிக்கவில்லை; தேர்தலுக்காக இது போன்ற செயல்களில் ஈடுபடுவதை அவர் விரும்ப மாட்டார்; அதனால் போதும்! இந்த நிலையில் திராவிட முன் னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் கழகத்தின் கருத்தை சுருக்க மாகவும் தெளிவாகவும் விளக்கி விட்டார் வேலூரில்!

காமராசர் பெண் வேட மணிந்த ஆணாக இருக்கும் வரையில்— தி. மு. கழகம் அவரை ஆதரிக்காது! அது மட்டுமல்ல அந்த வேடத் தோடு நம்மீது வார்த்தைக் கணைகளையும் பொழிய முன் வருவாரே யானால் தி. மு. கழகம் அவரை எதிர்த்திடவும் தயங்காது! பெண்ணு டைப் பிரதமர் இதை உணர்ந்திட வேண்டும் — புண்ணுடை நெஞ் சில் வேல் எறிவது — புலியை வலுச்சண்டைக்கு இழுப்பது — இரண்டுமே பொல்லாத செயல்கள் என்பதை புதிய அமைச்சருக்கு கண்டிப்பாக நினைவூட்டுகிறோம்.

ஞானப்பழம்...

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

தான் டால்ஸ்டாய்க்கு மணவிழா முடிந்தது. கருத்தொருமித்த அந்த இரண்டு உள்ளங்களின் கூட்டுறவால் மலர்ந்த இல்லறம் இன்பகரமாக நடந்து வந்தாலும், காலத்தின் வளர்ச்சியால் டால்ஸ் டாயின் கொள்கையிலே பெரு மாற்றம் ஏற்பட்டு, இல்லக் கிழத் தியைவிட்டு அவர் பிரிய நேர்ந்தது.

மறைந்தார்

அன்றொருநாள்! மாளிகை யிலே டால்ஸ்டாயைக் காண வில்லை. மாளிகையின் மூலை முடுக்குகளிலெல்லாம் தேடினார் கள். அகப்படவில்லை. ஆனால் இரண்டு நாட்களுக்குப்பின் டால்ஸ்டாய் பிணமாக எடுத்து வரப்பட்டார். வாழ்க்கை யிலே விரக்தி ஏற்பட்டு துற வறத்தை மேற்கொண்ட அந்த ஞானப்பழம் காடுகள் தாண்டி, கழனிகள் கடந்து, காற்றிலே அடிபட்டு, மழையிலே நனைந்து, வெய்யிலின் 'கருணை'க்குப் பாத் திரமாகி முடிவிலே காய்ந்து சரு காகி சாய்ந்து கானகத்திலே அனாதையாகக் கிடந்தார்—செய்தி அறிந்து அவரைத் தூக்கிவரும் போது அவர் பிணமானார்.

டால்ஸ்டாய் மறைந்தார்-அவர் எழுதிய 'குழந்தைப்பருவம்' அவர் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிறது. டால்ஸ்டாய் இறந்தார்-அவர் தீட்டிய 'வாலிபப் பருவம்' ஒளிவீசிய வண்ணமிருக் கிறது. சாவின் கையில் டால்ஸ் டாய்—ஜகத்தினர் கையில் 'அன்னா கரினா'—யுத்தமும் சமாதானமும்! வாழ்க அவர் புகழ்!

சூ-என்-லாய் சுவைக்காத காட்சி!

கலைத்தோட்டம்

ஞானப்பழம்—டால்ஸ்டாய்

★

அவளோ அழகின் தெய்வம்; பருவ மோகினி; காவியம் பேசும் கண்ணாடி மேனியாள்! ஆனால் அந்த அழகுசுந்தரியின் கரம் பிடித்தவனோ பருவத்தின் எல்லைக் கோட்டைத் தாண்டிக் கொண்டிருப்பவன் — வயது மிருந்த 'வாலிபன்'—

இந்நிலையில் அந்தப் பெண்ணரசியோ விழியாலே மொழி பேசிய வாலிபன் ஒருவனைச் சந்தித்தாள்—ஓடும் ரயிலிலே அவன் ஓயிலில் மயங்கினாள். கணவனென்று கைபிடித்த வாலிபக் கிழத்தையும், காந்தமென நெஞ்சு பற்றிய அந்த ஆண் சிங்கத்தையும் எடை போட்டாள்! அவள் இதயம் இரும்பானது—காந்தத்தை நாடி நகர்ந்தது—அவள் அவனுடன் ஓடிவிட்டாள்—

ஓடி வந்த ஒய்யாரியுடன் சமுதாயத்தில் நடமாடப் பின்வாங்கி விட்டது அந்த ஆண்சிங்கம். அவளோ மனமுடைந்தாள். பழிக்கும் சமூகத்தைக் கண்டு பயந்தாள்-பயத்தின் எல்லையிலே முடிவொன்று செய்தாள். சீறி வந்த புகைவண்டியின் உருண்டு வந்த சக்கரங்களுக்கிடையே தான் தேடி வந்த அமைதியைப் பெறுகிறாள்!

இப்படி ஒரு நவீனம்— உலக இலக்கியத்தில் என்றும் உயிரோடு நடமாடும் உயர்ந்த படைப்புகளின் ஒன்று—'அன்னா கரினா' எனும் அழகியின் சரிதம் கூறும் சுவையான நாவல்!

அவர் வாழ்வு

நம்ப மாட்டார்கள் எவரும், இப்படி ஒரு உயர்ந்தநவீனத்தை —சமூகத்தின் சீர்கேட்டைப் பட மெடுத்துக் காட்டும் சிறந்த இலக்கியத்தைச் செய்துகாட்டியவர் ஒரு மதப்பித்தர் என்பதை. எனினும் உண்மையே! ஆகவே தான் நிகரற்ற இலக்கியச் சிற்பியாக விளங்கினாலும், அன்னவர் தன்னிடமே ஒரு பெரும் குறை இருப்பதாகக்கருதினார். கலையின் ஏற்றத்துக்குச் செலவிட வேண்டிய நேரத்தை கடவுளின் ஆராய்ச்சிக்கு அர்ப்பணித்தார். கரை காணாது கலங்கினார். அதன் விளைவே அமைதியாகப் பிறந்த அந்த மேதை அலை மோதும் நெஞ்சத்துடன் வாழ்ந்தார்—பரிதாபத்திற்குரிய முறையிலே மடிந்தார்.

பிறந்தார்

ரஷ்ய நாடு பெற்ற புத்தறிவாளர்களில் ஒருவர்தான் மதமெனும் மாய் மாலத்தில் சிக்கிய அந்த இலக்கியப் பூமான்—லியோ டால்ஸ்டாய்!

அறிஞர்கள் பலரை பெற்றுத் தந்த உலகம், அநேகமாக அவர்களை அனாதையாக விட்டுத்தான் வேடிக்கைப் பார்த்திருக்கிறது. அப்படித்தான் டால்ஸ்டாயின் தாயையும் தந்தையையும்அவரது ஒன்பதே வயதுக்குள் பறித்துக் களித்தது.

வளர்ந்தார்

பெற்றோர்களை இழந்த டால்ஸ்டாய் தன்னையே நம்பினார் — படித்தார்; நிறைய படித்தார். பன்மொழி கற்றார் காசான் எனும் பல்கலைக் கழகத்தில்.

இலக்கிய உலகம் வெகு எளிதில் எவரையும் ஏற்றுக் கொள்வதில்லை; அதற்கு டால்ஸ்டாய் மட்டும் விலக்கல்ல — முதலில் அவருக்கு ராணுவபூமிதான் வரவேற்று இடம் தந்தது. ஆனால் அந்த ரணகளததையே தனது கலாமண்டபமாக மாற்றிக் கொண்டார் டால்ஸ்டாய்.

இழுத்துக் கட்டப் பட்ட துணிக் கூடாரம்— திரும்பும் இடமெல்லாம் இருதயமற்ற கருவிகள் —ராணுவத்தினரின் ஆட்டம் பாட்டம் — இவை அனைத்தும் டால்ஸ்டாயின் கலா நெஞ்சத்தைப் பேசவைத்தன. அவர் நெஞ்சம் பேசியது. காகிதமும் எழுதுகோலும் அந்த நெஞ்சப் பேச்சை எழுத்தாக்கின. 'குழந்தைப் பருவம்' — இருதயமற்ற ஜார் மன்னனே போற்றிய 'செபாஸ்டபூல்' போன்ற எழுத்

டால்ஸ்டாயின் இளமைப் பருவம்

துப்புதையல்களை அந்தப் போர்க்களம்தான் பெற்றுத் தந்தது.

ராணுவத்தை வெறுத்துத் தள்ளி டால்ஸ்டாய் வெளிவந்த சமயம், இலக்கிய உலகு அவருக்கு வாகைசூடி வரவேற்றது; அவரும் நன்றி தெரிவித்தார், எண்ணற்ற எழுத்துப் படையல்களை அள்ளித் தந்ததின் மூலம்.

மணந்தார்

ஏழைகளின் ஒழுக்கத்தை— எழில் மிகு கோலாகல புரியினரின் கோர நர்த்தனத்தைகுழைத்துக் குழைத்துப் பூசி, சுவை குன்றா கருத்தோவியங்களைத் தீட்டி, சமுதாயத்தில் மறுமலர்ச்சி காண வேண்டுமென்று துடித்த அந்த இலக்கிய கர்த்தா —'தனக்கொரு கொள்கை—தாரணிக்கொரு உபதேசம்' என்ற முறையிலே வாழ்க்கை நடத்தவில்லை. "நான் செய்த தீச்செயல்கள் இவையிவை — நான் முடித்துக் காட்டிய நற்காரியங்கள் இத்தனை — என் கொள்கை இன்னின்ன" என்று ஒரு ஏட்டில் குறித்து தான் மணக்க இருந்த பெண்ணுக்கு அனுப்பிவிட்டாராம்டால்ஸ்டாய்

அந்த மணப்பெண்ணுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. பிறகு

[6–ம் பக்கம் பார்க்க]

'அம்மையப்பன்' ஆரம்ப விழா

●

புதுமை நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் அவர்கள்கதாநாயகனை நடிக்கும் அம்மையப்பன் திரைப்படத்துவக்கத்தின்போது எடுத்த படங்கள் மேலே காட்சி தருகின்றன. கொள்கை வீரரும், இலட்சியத்தில் நீங்காப் பற்று கொண்டவருமான தோழர் ராஜேந்திரன் கதாநாயகனை முதன் முதல் தோன்றும் படத்தின் ஆரம்பநாளிலே பூரிப்போடும், புதுமகிழ்ச்சியோடும், கலந்து கொண்டு வாழ்த்துக் கூறினார் புரட்சிநடிகர் எம். ஜி. ராமச்சந்திரன். 'அம்மையப்பன்' படமாகும் பணிகளிலே ஈடுபட்டு ஒத்துழைக்க முன் வந்ததோடு, ராஜேந்திரனின் முதல் படம் முழு வெற்றியடைய வேண்டுமென்று வாழ்த்தினார் சிவாஜி கணேசன். ராஜேந்திரனின் முன்னேற்றத்திலே அக்கரை கொண்ட இருபெரும் நடிகர்களான எம், ஜி. ஆர்., சிவாஜி கணேசன் இருவரும் வந்திருந்து ஆரம்ப நாளை சிறப்பித்த காட்சிதான் மேலேகாணப் படுவது. மற்றும் தோழர்கள் புருஷோத்தமன் எம். எல். சி., டபிள்யூ கே. தேவராசன், குமரவேல் சண்முக முதலியாரும் வந்திருந்தனர். அம்மையப்பன் நேஷனல் புரொடக்ஷனில் உருவாகிறது. தோழர் பீம்சிங் டைரக்ட் செய்கிறார், 'அம்மையப்பன்' தோழர் கருணாநிதி சிறைச் சாலையில் எழுதிய "ரத்தக் கண்ணீர்" என்ற நாடகமாகும். ரத்தக்கண்ணீர் புத்தகம் அம்மையப்பன் நாடகமாக மாறி இன்று திரைப்படமாகத் தயாராகிக் கொண்டிருக்கிறது. சென்னையில் அம்மையப்பன் நாடகத்திற்குத் தலைமை வகித்த அண்ணா அவர்கள், ராஜேந்திரன் டி. வி. நாராயணசாமி ஆகியோர் சிறந்த நடிகர்கள் மட்டுமல்ல — சிறந்த லட்சிய வீரர்கள்—கொள்கைக்காக தொழிலைவிடுவார்களே தவிர தொழிலுக்காக கொள்கையை விடமாட்டார்கள் என்று கூறினார்கள். அத்தகைய கொள்கை வீரர்கள் நடிக்கும் திரைப் படத்தின்வெற்றிக்கு அனைவரின் நல்லெண்ணமும் — கண்யமான செயலும் துணை புரியுமாக!

கடைசிப்பக்கம்

தஞ்சை : ஞானம் டாக்கீசில்
8-7-54 வியாழன் இரவு 10 மணிக்கு
புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்
அவர்கள் தலைமையில்
ராஜேந்திரன் நாடக மன்றத்தினர் நடிக்கும்
[illegible]
கதை வசனம் மு. கருணாநிதி
ஆறு மாத சிறை வாழ்வில் தீட்டிய புதிய நாடகம்
நடிகர்கள் : எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன், எம். ஆர். சாமிநாதன், ஜி. சகுந்தலா, சண்முகசுந்தரி, ஹேமலதா மற்றும் ராஜேந்திரன் நாடக மன்றத்தார்.

சி. தெய்வீகன்—நீலகிரி.

(?) திராவிட நாடு கிடைத்து விட்டால் இந்தியை நம் நாட்டை விட்டே ஒழித்துவிடு வீர்களா?

ஒழித்துவிடமாட்டோம்; ஓட்டி விடுவோம்.

எ. காமாட்சி — தாடிக்கொம்பு

(?) ஆச்சாரியாரின் ஆசை என்ன ?

பள்ளிக்கூடங்கள் பஜனை மடங்களாக வேண்டும் — பாதி வேளை பாலர்கள் ஆடுமாடு மேய்க்கவேண்டும்; இதுதான்!

வலியான்—பாகனேரி.

(?) கம்யூனிஸ்டுகள் ஏன் திராவிடநாடு பிரிவினையைஆதரிப்பதில்லை?

சிலருக்கு வீம்பு; சிலருக்கு பிரச்சினை புரியாது—இன்னும் சிலருக்கு அவர்களது மத (மார்க்ஸ்) நூலில் திராவிடநாடு பற்றி கூறப்படவில்லை.

சுந்தரம்—காரைக்குடி

(?) 'கல்கி' அவதாரம் என்றால் என்ன?

குட்டையைக் குழப்பி, முடிவில் 'வெற்றிகர வாபஸ்' பெறும் இருபதாம் நூற்றாண்டின் 'டங்கர்'.

சந்திரசேகரன் —திருநாகேசுவரம்

(?) சேரன் செங்குட்டுவன், கனக விசயர் தலையில் கல்லேற்றி வந்து கண்ணகிக்கு சிலை வடித்ததாக சரித்திரம் கூறுகிறதே-அந்த சிலை இப்போது எங்கிருக்கிறது?

ஆரிய மாயைக்குள் மறைந்திருக்கிறது.

நலவிரும்பி—சென்னை

(? நமது நாட்டில் வேரூன்றி இருக்கும் வெள்ளை கம்பெனி முதலாளிகளை வெளியேற்றாமல் நமது தேசிய சகோதரனை வெளியேறு என்று கோஷமிடுவது தான் அரசியல் ஞானமா ?

தேசீய சகோதரன் என்ற பெயரால் தென்னகத்தில் சுரண்டிக் கொண்டு கையிலே அதிகாரமிருந்தும் அதைப்பயன் படுத்தி வெள்ளை முதலாளியை விரட்டாமல் விட்டுக் கொண்டிருப்பவர்களை "வெளியேறு நீ முதலில்" என்று சொல்வது குறுகிய ஞானமென்று யார் தோழரே சொன்னது ?

என். சந்திரசேகரன் நாகர்கோயில்

(?) இந்தியாவைப் பாதுகாக்க காங்கிரஸ் கட்சியால் முடியுமா?

முதலில் காங்கிரஸ் கட்சியைப் பாதுகாக்க ஒரு ஆளைக் குறிப்பிடுங்கள் நண்பரே!

(?) ராசகோபாலாச்சாரியாரின் ஆட்சியில் மக்களுக்கு இருந்த நம்பிக்கையைவிட, காமராசரின் ஆட்சியில் அதிக நம்பிக்கை இருப்பதாக காமராசர் பக்தர்கள் பிரச்சாரம் செய்வது பற்றி தங்கள் கருத்தென்ன?

அதிக நம்பிக்கைக்குப் பாத்திரமாகிறவர்களுக்கு எப்போதுமே அவர்களிடமிருந்து அதிகமாக எதிர்பார்ப்பார்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் நடுநிலைமையோடும், நேர்மையோடும் ஜாக்கிரதையாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

புரட்சிமணி, அலசூர் பெங்களூர்

(?) திராவிடத் தந்தை ஈ. வே. ராவை, உலகில் இதுவரை தோன்றிய புரட்சி வீரர்களுள் யாருக்கு சமமாக ஒப்பிடலாம்?

யாரையும் ஒப்பிட இயலாதபடி அவர் ஒரு ஈடு இணையற்ற பெரியார்.

வேலுமணி—கடலூர்

(?) ராமசாமி படையாச்சியார் வன்னியர் சமூகத்துக்குச் செய்தது என்ன?

மாபெரும் துரோகம்.

(?) தி. மு. கழகத்தை ராமசாமி படையாச்சி அழித்து விடுவாரா?

அழித்து விடுவதாகச் சொன்ன ராமசாமிப் பெரியாரே அணைத்து மகிழ விரும்புகிறார்—இவராலா முடியப் போகிறது—பாவம்!

துரைசாமி—சித்தூர்

(?) 'முரசொலி'யில் அடிக்கடி திருத்தணிப்பிள்ளை யார் என்று எழுதுகிறீர்களே—அதுயார்?

அய்யய்யே —சொல்ல மாட்டேன்--முரசொலி, அழுக்குப்பட்டுவிடும்.

சுந்தரிமணாளன்-சென்னை

?) நாடு நலம்பெற மக்கள் மன்றத்தலைவர், கலைஞர்கள், ஆசிரியர்கள், சர்க்கார் ஊழியர்கள்முதலியோர் கட்சிப் பற்றற்று இருத்தல் வேண்டுமோ? கூடாதா ?

கட்சிப்பற்றற்று இருக்கலாம் — ஆனல் அந்த திராவிடத்து தோழர்கள் நாட்டுப் பற்றுக் கொண்டு வாழ வேண்டியது அவசியம்—

(?) இன்ப திராவிடம் கிடைத்தவுடன் சுரண்டல், லஞ்சம், வறுமை முதலிய நாட்டு நலிவுகள் தீர என்ன திட்டம் வகுக்கப் பட்டு — வகுக்கப்பட — இருக்கிறது ?

சுரண்டலை ஒழிக்க திட்டம் தீட்டப் பட்டாலே— லஞ்சம் வறுமை முதலியன ஒழிந்த சுக வாழ்வு துவக்கம் என்று தானே அர்த்தம். திராவிடம் கிடைக்கட்டும் – பிறகு திட்டங்களுக்கா பஞ்சம் ?

இரா. சாமிநாதன் கோவை.

(?) திராவிட மில் தொழிலாளர் சங்கம் ஆரம்பித்தால் கம்யூனிஸ்டுகள் என்ன நினைப்பார்கள் ?

ராமமூர்த்தி என்ன நினைக்கிறாரோ — அதை எல்லோரும் நினைப்பார்கள். 'அவனை'ப் பற்றி சொல்லவும் வேண்டுமோ— ?

சே. வேலு—நாமக்கல்

(?) அண்ணாதுரைக்கு அறிஞர் என்ற பட்டம் யாரால்—எதற்காக-எங்கே கொடுக்கப்பட்டது?

அறிஞர்களால், அவர் அறிஞர் என்பதற்காக, அறிஞர்கள் கூடியுள்ள இடத்தில் கொடுக்கப் பட்டது.

இருளப்பசாமி,—ஆற்காடு.

(?) தி. மு. கழகம் வன்னியர்களைப்பற்றி என்ன கருதுகிறது?

தி. மு. கழகத்திற்கு ஜாதிப் பாகு பாடு கிடையாது. ஆனல் பிற்படுத்தப் பட்ட சமூகங்களின் துணைவுகை நின்று தி.மு. கழகம் பணியாற்றும். வன்னியர்களின் பெயரைக் கூறிக்கொண்டு, வன்னியப் பெருமக்களை ஏமாற்றிக் கொண்டு, வன்னியத் தலைவர்களை வசைமாரி பொழியும் துரோகிகளை தி. மு. கழகம் கண்டித்தே தீரும்.

மாரியப்பன் இஞ்சிக்குடி-பேரளம்

(?) கல்லக்குடி போராட்டத்துக்கு காமராசர் கை கொடுப்பாரா?

கொடுத்திருக்கிற கையும், காலும், உயிரும் போதாதா? இன்னும் காமராசர் வேறு கை கொடுக்க வேண்டும்?

மு. க. வின்
புதையல்
புதிய தொடர் கதை
- இலங்கை வாழ் தமிழரின் அவதி
- இங்குளோர் தாங்கும் 'அல்லல்' —
- இதனையும் விளக்கிச் சொல்லும் !
- இன்பவல்லி ஒருத்தியின் கதையையும்இணைத்துச் [செல்லும்!
- வீரம் காட்டும் ! விவேகமூட்டும் !
- புயலுமுண்டு — தென்றலுமுண்டு !
- எழிற்காவும் உண்டு — எரிமலைத் தணலும் உண்டு !

இந்த நல் விருந்தை உண்டு பயன் பெறுவீர் !

ஜூலை 16— இதழில் ஆரம்பமாகிறது

மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. அலுவலகம்: 62, எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை—14.